1979 ஏப்ரல் 19]

இருந்தது. முன்பு வேகவதி ஆறு இங்கு ஓடிக் கொண்டிருந்தது. என்பதை காட்டுகின்றது. பல்லவர் காலத்தில் கி.பி. 6 முதல் 9-ம் நூற்றாண்டுகளில் காஞ்சி நகரை ஒட்டி ஓடிக்கொண்டிருக்க வேண்டும். பின்பு ஆற்றின் போக்கு மாறிவிட்டது. தற்பொழுது காஞ்சிபுரத்திலிருந்து 2 கி. மீ. தொலைவில் ஓடுகின்றது. இக்குழியில் 6 மீட்டர் ஆழத்தில் மண் ஜாடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

(Period II) இரண்டாவது காலத்தின் மனிதன் வாழ்ந்ததற்கும் இரு பிரிவான கட்டிட அமைப்புகள் (Two structural phases) இருந்ததற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன. முதல் பிரிவில் களிமண் மேடையும் எரிந்ததற்கும் அடையாளங்கள் காணப்பட்டன. அதிலிருந்து கரித்துண்டுகள் சேகரிக்கப்பட்டன. குறியீடுகள் உள்ள (graffite) பானை ஓடுகள் கறுப்பு சிவப்பு பானை ஓடுகள், வர்ணம் தீட்டப்பட்ட பானை ஓடுகள், பச்சை நிறமணிகள் கிடைத்துள்ளன.

(Period III) மூன்றாவது காலத்தில் மண் குவியல் (debris) அதிக அளவில் காணப்பட்டது. உடைந்த செங்கற்கள் (சுண்ணாம்புடன்) சில கருங்கற் பலகைகள் ஆகியவை சேர்ந்து காணப்பட்டன. இது உடைந்த கட்டிடத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம். கட்டிடத்திற்கு ஏற்பட்ட அழிவு மிகவும் அதிகமானது. பல்லவ மன்னர்களின் ஆட்சி முடிவு காலமாகிய கி.பி. 8-9 ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சண்டைகளினால் அழிந்திருக்கலாம். இப்பகுதியில் விஜயநகர மன்னர்கள் காலத்தில் கட்டப் பெற்ற மண்டபம் ஒன்று காணப்படுகிறது. இக்காலத்தில் மஞ்சள் நில கண்ணாடி மணிகள், புதை உருவங்கள், சுடு மண்ணால் ஆகிய சிவலிங்கம் சிவப்பு நிற பானை ஓடுகள், கறுப்பு நிற பானை ஓடுகள் கிடைத்தன.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II.

[502 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 723-க்கான விடையைக் காண்க.]

பதில் : இல்லை.

ஆனால் கிராமப்புறங்களில் வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் அளிக்கப்படும் கடன் வசதிகள் பற்றிய முழு தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

கிராம கூட்டுறவு வீட்டு வசதி.

கிராம மக்களுக்குச் சீரான முறையில் வீடுகள் கட்டுவதற்கு வகை செய்யும் பொருட்டு, 1950-ம் ஆண்டு முதல் கிராம வீட்டு வசதி சங்கங்கள் துவக்கப்பட்டன. தற்போது கிராமப்பகுதிகளிலுள்ள உறுப்பினர்களின் தேவையை நிறைவு செய்ய 365 கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன

இந்த சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கென உச்ச நிலைக் கடனாக (Maximum Loan) ரூ. 10,000 அளிக்கப்படுகின்றன. தமிழ்நாடு வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்துடன் 119 சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. கடந்த அய்ந்து ஆண்டுகளில் இந்தச் சங்கங்கள் கிராமப் பகுதிகளில் வாழும் உறுப்பினர்களுக்கு ரூ. 130.00 லட்சம் கடன் வழங்கி, 1,635 வீடுகள் கட்டியுள்ளன. இணையாத எஞ்சிய சங்கங்கள், அவற்றின் உறுப்பினர்களுக்கு 1973 மார்ச்சு திங்களுக்கு முன்பு வழங்கிய கடன்களைத் திரும்பப் பெறும் பணியில் ஈடுபட்டுள்ளன. புதிதாக கடன் வழங்குவதில்லை.

கிராமப் பகுதிகளில் வீடுகள் கட்ட அரசே ரூ. 5,000 நேரடியாக வழங்கி வந்தது. இத்திட்டம் 1966-ம் ஆண்டு முதல் கிராம வீட்டு வசதி பிரிவின மூலமும், வட்டார வளர்ச்சி அதிகாரிகள் மூலமும், செயற்படுத்தப்பட்டு வந்தது. இதுகாறும் இத்திட்டத்தின் கீழ் கிராமப்பகுதி மக்களுக்கு ரூ.359 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வெற்றிகரமாக நடைபெறாததால், 1976-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு வீட்டுவசதிக் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருக்கு மாற்றப்பட்டது. அவ்வாறு கூட்டுறவுத் துறையோடு இணைக்கப்பட்ட பிறகு 1976-77ம் ஆண்டில் கிராமப்பகுதிவாழ் மக்களுக்கு பயனளிக்கும் வகையில் 10 வட்ட அளவிலான (Taluk level) ஊரக கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் துவங்கப்பட்டன. இந்தச் சங்கங்களின் பணி போதுமானதாகத் தோன்றாததால் 1977-78-ம் ஆண்டில் 50 கோட்ட அளவிலான ஊரக கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இச்சங்கங்களை அமைக்கச் சற்று காலதாமதமானதால் 30—6—78 வரை ஒப்பளிக்கப்பட்ட தொகை சுமார் ரூ. 24 லட்சம் மட்டுமேயாகும்.

மக்கட் தொகையில் 80 சதவீதம் பேர் கிராமப்புறங்களில் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் தீ முதலியவைகளால் பாதிக்கப்படும் கூறை வீடுகளில் குடியிருந்து வருகின்றனர். இக்கிராமப்புற மக்கள் இம்மாதிரி அபாயங்களால் பாதிக்காதவாறு ஓட்டு வீடுகள் கட்டும் பணியினை மேலும் உயர்த்தும் வண்ணம், 1978-79 ஆம் ஆண்டில் தொடங்கும் ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில், கிராமப்பகுதிகளில் ஊரக வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக "ஒரு லட்சம் வீடுகள்" கட்டப்பட வேண்டும் என்று அரசு முடிவெடுத்துள்ளது. ஆண்டு தோறும் கட்டப்படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு :—

ஆண்டு.	கட்டப்படவிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை.
1978-79	10,000
1979-80 ..	20,000
1980-81 ..	20,000
1981-82 ..	25,000
1982-83 ..	25,000

1979 ஏப்ரல் 19]

இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு வெவ்வேறான மூன்று வகை வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன :—

'எ' வகை வடிவமைப்பு ஒரு வீடு 3,000 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் கட்டுவதற்கு விழையும் உறுப்பினர்களுக்கு உகந்ததாகும்.

'பி' வகை வடிவமைப்புக்கு ஆகும் மதிப்பீட்டு செலவு ரூபாய் 4,000.

'சி' வகை வடிவமைப்புக்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 5,000.

கிராமப் பகுதிகளில் உள்ள மக்களிடையே பொருளாதாரத்தின் மெலிந்த பிரிவினராய் உள்ளவர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக அதிக அளவில் வீடுகள் கட்ட கடன் பெறுவதை ஊக்குவிக்கும் வண்ணம், அரிசனங்களுக்கும் அரிசனங்கள் பெருமளவு வாழுமிடங்களில் வீடுகள் கட்ட முன் வரும் பல்வேறு வகுப்பினருக்கும் மானியம் தரப்படும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 600 ரூபாய் அல்லது வீட்டின் மதிப்பீட்டிச் செலவில் 20 சதவீதம் இவற்றில் எது குறைவோ, அந்த அளவுக்கு மான்யம் வழங்கப்படும். இந்த மானியத்தை பெறுபவருக்கு வீட்டின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 3,000-க்குள் (''எ'' வகை) இருக்க வேண்டும். இம் மானியத்தைப் பெற விழைவோரது ஆண்டு வருமானம் எல்லா ஆதாரங்களிலிருந்தும் ரூ. 4,200-க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ''பி'', ''சி'' வகை வீடுகளைக் கட்ட விரும்புவோருக்கு இம்மானியத் தொகை வழங்கப்பட மாட்டாது. ஊரக கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் மூலம் கடன் பெற விழையும் உறுப்பினர்கள், எவ்வகை வடிவமைப்பு உள்ள வீடாக இருந்தாலும், உழைப்பாகவோ அல்லது வீடு கட்ட பயன்படும் பொருள்களாகவோ அல்லது பணமாகவோ வீட்டின் மதிப்பீட்டுச் செலவில் 20 சதவீதத்தை தங்கள் பங்காக செலுத்த வேண்டும். அரிசனங்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைகளுக்காகும் வட்டியைத் தொடர்ந்து அரசு ஏற்கும்.

இத்திட்டத்தின் கீழ் ''லட்சம் வீடுகள்'' கட்ட வேண்டியுள்ளதால் நிதி நிலை வசதிக்குட்பட்டு, ஒரு வீட்டின் மதிப்பீட்டை ரூ. 5,000க்குள் நிர்ணயிக்க வேண்டியுள்ளது. உச்ச வரம்பை ரூ. 10,000 ஆக உயர்த்தினால், பல ஏழை மக்கள் இதனால் பயன் அடைய முடியாது. கட்டும் வீடுகளின் எண்ணிக்கையும் குறையும். இது அரசின் கொள்கையல்ல.